பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

28 03 2024 — 12 40

வியாழக்கிழமை — நண்பகல்

தலைப்புச் செய்திகள்-

1. மக்களவைக்கு இரண்டாவது கட்டமாக தேர்தல் நடைபெறும் 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 88 மக்களவைத் தொகுதிகளுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

2. ராணுவ உயரதிகாரிகள் மாநாடு இன்று புதுதில்லியில் தொடங்கியது.

3. வரும் கல்வி ஆண்டு முதல் பி எச் டி படிப்புக்கு நெட் மதிப்பெண்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர் சேர்க்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று பல்கலைக்கழக மானியக் குழு அறிவித்துள்ளது.

4. உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு டிமிட்ரோ குலேபா இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வந்தடைந்தார்.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் தில்லி அணி - ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது

*----- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

மக்களவைக்கு இரண்டாம் கட்டமாக தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் வேட்புமனுத் தாக்கல் இன்று தொடங்கியது.

இதற்கான அறிவிக்கையை தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ளது.

இரண்டாம் கட்ட தேர்தலுக்கு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய அடுத்த மாதம் நான்காம் தேதி கடைசி நாளாகும்,

கேரளாவில் 20 தொகுதிகள் உட்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 88 மக்களவைத் தொகுதிகளுக்கும், மணிப்பூரில் ஒரு மக்களவைத் தொகுதியின் சில பகுதிகளுக்கும் இரண்டாம் கட்ட தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த தொகுதிகளில் அடுத்த மாதம் 26-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதனிடையே மக்களவைக்கு முதல் கட்டமாக தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை தற்போது நடைபெற்று வருகிறது.

இந்த தொகுதிகளில் வேட்புமனுக்களை விலக்கிக் கொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகம், புதுச்சேரி உட்பட 17 மாநிலங்கள் மற்றும் யூனியன பிரதேசங்களில் உள்ள 102 தொகுதிகளில் அடுத்த மாதம் 19ஆம் தேதி முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

நிலையான வளர்ச்சியை எட்ட பாலின சமத்துவமும் பெண்களுக்கான பொருளாதார அதிகாரமும் முக்கியமானவை என குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பின் மகளிர் பிரிவின் 40-வது ஆண்டு விழா புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்றுப் பேசிய குடியரசுத் துணைத் தலைவர் பாலின சமத்துவமும் பெண்கள் தலைமையிலான வளர்ச்சியும் முற்போக்கான சமூகத்தின் அடிப்படைக் கொள்கைகள் என்று கூறினார்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அவர் குறிப்பிட்டார்.

தற்போது பெண்களுக்கான உரிய இடம் சமூகத்தில் உறுதி செய்யப்படுவதாக திரு ஜெக்தீப் தன்கர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மின்னணு வர்த்தகத்தை வலுப்படுத்துவது தொடர்பாக இந்தியா – மலேசியா இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திரு ஜெய்சங்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், மலேசிய அமைச்சர் திரு கோவிந்த்சிங் தியோவுடன் நடத்திய பேச்சுக்கள் வெற்றிகரமாக அமைந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

ராணுவ உயரதிகாரிகள் மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்கியது.

ராணுவ தலைமை தளபதி ஜெனரல் மனோஜ்பாண்டே காணொலி வாயிலாக ராணுவ உயரதிகாரிகளுடன் கலந்துரையாடுகிறார். பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் வரும் இரண்டாம் தேதி ராணுவ உயரதிகாரிகளுடன் கலந்துரையாடுகிறார்.

நாட்டின் பாதுகாப்பு சூழல் தொடர்பாக இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளது.

**[]<<<>>>[]**

2024-25-ஆம் கல்வி ஆண்டு முதல் பி எச் டி படிப்புக்கு நெட் மதிப்பெண்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர் சேர்க்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று பல்கலைக்கழக மானியக் குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பல்கலைக்கழக மானியக்குழுத் தலைவர் திரு **mamidala** ஜெகதீஷ்குமார் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சில பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் நுழைவுத் தேர்வு மூலம் பி எச் டி மாணவர் சேர்க்கை நடத்துவதாகவும், எனவே அதற்குப் பதிலாக நெட் மதிப்பெண்களை மட்டுமே கொண்டு ஆராய்ச்சி படிப்புகளுக்கு சேர்க்கை நடைபெற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

உலக அளவில் ஆண்டுக்கு 105 கோடி மெட்ரிக் டன் உணவு வீணாக்கப்படுவதாக ஐ நா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐ நா வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், ஒவ்வொரு ஆண்டும் ஒரு நபர் 79 கிலோ உணவை வீணாக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2030-ஆம் ஆண்டுக்குள் உணவு வீணாக்கப்படுவதை பாதியாக குறைக்கும் வகையிலான நடவடிக்கைகளை உலக நாடுகள் மேற்கொண்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

வீடுகளில் 60 சதவீதமும், உணவகங்களில் 28 சதவீதமும் உணவுகள் வீணாக்கப்படுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிப்பதற்கு நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்திலும் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற கல்லூரி மாணவி முதல்முறை வாக்களிப்பதை ஆர்வமுடன் எதிர்நோக்கி இருப்பதாகத் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - மாணவி ) -24-- செகண்ட்*

**[]<<<>>>[]**

உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு டிமிட்ரோ குலேபா இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வந்தடைந்தார்.

இந்த பயணத்தின்போது வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் மற்றும் தேசிய துணை பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருடன் அவர் இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மண்டல மற்றும் உலகளாவிய பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாகவும், இருதரப்பு உறவை மேம்படுத்துவது தொடர்பாகவும் உக்ரைன் அமைச்சருடன் விவாதிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த தொழிலதிபர்களுடனும் உக்ரைன் அமைச்சர் கலந்துரையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

இந்தியா – சீனா எல்லை தொடர்பான பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வு காணும் வகையில் இரு நாடுகளும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பெய்ஜிங்கில் இந்தியா – சீனா எல்லைப்பகுதி விவகாரங்களுக்கான ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்பு செயல்முறைக் கூட்டம் நடைபெற்றது.

இரு நாடுகளும் ராணுவம் மற்றும் வெளியுறவு அமைச்சக நிலையிலான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து மேற்கொள்வதன் மூலம் பிரச்சினைகளுக்கான தீர்வை எட்ட முடியும் என்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் நெறிமுறைகள் மூலமாக எல்லைப்பகுதியில் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக இரு நாடுகளும் விவாதித்ததாக அமைச்சகம் கூறியுள்ளது.

[]<<<>>>[]

பிரேசில் நாட்டின் தலைமையில் ஜி-20 இரண்டாவது வேலைவாய்ப்புப் பணிக்குழுக் கூட்டம் பிரேசிலியாவில் தொடங்கியது.

அனைவருக்கும் நிலையான வேலைவாய்ப்புடன் கூடிய வளர்ச்சி என்பதை அடிப்படையாக கொண்டு இந்த கூட்டம் நடைபெறுகிறது.

பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்காவுடன் இணைந்து இந்தக் கூட்டத்துக்கு இந்தியா தலைமை வகிக்கிறது.

மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலாளர் திருமதி சுமிதா தவ்ரா இந்தியா சார்பில் இந்த பணிக் குழுக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளார்.

இக்கூட்டத்தில் பேசிய அவர், இந்தியாவின் ஜி-20 தலைமைத்துவத்தின்போது தொடங்கப்பட்ட பணிகளை இந்தக் கூட்டம் வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது என்று கூறினார்.

[]<<<>>>[]

இமயமலையின் மேற்குப்பகுதி மற்றும் நாட்டின் வடமேற்கில் உள்ள சமவெளி பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு-கஷ்மீர், லடாக், இமாச்சல பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, உத்திரபிரதேசம் மற்றும் உத்தரகாண்டில் வரும் 31-ஆம் தேதி வரை பரவலாக மழை பெய்யக்கூடும் என்று அது கூறியுள்ளது.

அருணாச்சல பிரதேசத்தின் சில இடங்களில் கனமழை மற்றும் பனிப்பொழிவு வரும் 30-ஆம் தேதி வரை இருக்கும் என்றும், அஸ்ஸாம் மற்றும் மேகாலயாவின் சில பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் தில்லி அணி - ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது. ஜெய்ப்பூரில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ஸ்பெயின் மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் சுமித்ரெட்டி சிக்கிரெட்டி இணை முன்னேறியுள்ளது.

மேட்ரிட்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 16-21,

22-20, 21-14 என்ற செட் கணக்கில் தைவான் இணையை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் சதிஷ் கருணாகரன் - ஆத்யா வாரியத் இணை தோல்வியடைந்தது.

ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் ஸ்ரீகாந்த், சதிஷ் கருணாகரன், மிதுன் மஞ்சுநாத், கிரண்ஜார்ஜ் அஸ்மிதா சாலிகா ஆகியோர் தோல்வியடைந்தனர்.

**[]<<<>>>[]**

மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ரோகன் போபண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை இன்று ஸ்பெயினின் மார்சல் **Granollers** அர்ஜெண்டினாவின் **Horacio** இணையை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

மெக்ஸிகோவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரித்விக் - நிக்கிகாலியாண்டா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

***End of News***